அன்பளிப்பு 28875
கி. வா. ஜ
சென்னை - 600 028.

ஸ்ரீ வேதவிநாயகர் சமரசத்தேன் மலர்மாலை—மலர் 2.

ஆழ்வார்களின்
சமரசப் பெருந்தன்மை

18572

சமரசக் கழகம்

ரிஜிஸ்டர்ட்] கும்பகோணம். [விலை 0—2—6.

ஆழ்வார்களின்
சமரஸப் பெருந்தன்மை

வைஷ்ணவர்களில் பெரியோர்களான ஆழ்வார்கள் சிவபெருமானையும், சிவனடியார்களையும், சிவச்சின்னங்களையும் போற்றியிருக்கிறார்கள். இது அவர்களது பெருந்தன்மையையும் சமரஸத்தன்மையையும் தெள்ளென விளக்குகிறது. இவ்விஷயம் அநேக சைவர்களுக்கும், ஸ்மார்த்தர்களுக்கும், வைஷ்ணவர்களுக்குங்கூடத் தெரியாது. இவ்விஷயம் தெரிந்தால் உலகத்திற்கே சமரஸபாவமும் ஈசுவரானுக்ரகமும் க்ஷேமமும் ஏற்படுமென்ற எண்ணத்தினால் அவ்வித உயரிய திருவாக்குகளில் சிலவற்றை ஈண்டு அநுசந்திப்போமாக.

அன்பளிப்பு
திருமதி: கி. வா. ஜ.
சென்னை

(18572)

1. சக்தி மூர்த்தம்

" ஏகைவ ஶக்தி꞉ பரமேஶ்வரஸ்ய
 பிந்நாசதுர்த்தா விநியோககாலே ।
போகே பவாநீ புருஷேஷு விஷ்ணு꞉
 கோபே து காளீ ஸமரே ச து³ர்கா ॥

அன்பளிப்பு
திருமதி: கி. வா. ஜ.
'காந்தமலை'
சென்னை - 600 028.

ஏகைவசக்திః பரமேஸ்வரஸ்ய
 பிந்நாசதுர்த்தா விநியோககாலே |
போகேபவானீ புருஷேஷுவிஷ்ணுః
 கோபேது காளீ ஸமரேதுதுர்க்கா" ||

என்று சொல்லப்படும் சக்திமூர்த்தம் விஷ்ணுமூர்த்தமே.

" பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
¶ பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து

¶ ஸர்வஶ்ரீஜீவாநு ஶீஜம் சுஷம் யொநிஸ்ஸநாதந꞉ ।

* * * *

ீீ யொநௌ ஸோஸுதுஂ தஜ்ஜம் கருவுயாஸ ।
ஹிரண்யம் சகூவாெர யொந்யாீணு ீஜீஜாநஸ ॥

கறைதங்குவேல் தடங்கண் திருவை மார்பில்
கலந்தவன்தா ளணைகிற்பீர் ''

(பெரிய திருமொழி—3-4-9)

இந்தப் பாசுரத்தில் திருமங்கையாழ்வார், இளஞ்சந்திரனை தலையில் தரித்துக்கொண்டிருக்கிற ஜடாமகுடத்தையுடைய சந்த்ரமௌளீசுவரனை வலது பாகத்திலும் தான் இடது பாகத்திலுமாக இருந்து ப்ரம்மதேவனைத் தன்னுடைய நாபிகமலத்திலிருந்துண்டாக்கியவர் விஷ்ணுமூர்த்தி என்று பாடியிருக்கிறார். தவிரவும் திருமங்கையாழ்வார்,

---

ஏஷபீஜீ பவான்பீஜம் அஹம் யோனிஸ்ஸநாதனః |

* * * *

மம யோனௌ ஸமாஸக்தம் தத்பீஜம் காலபர்யயாத் |
ஹிரண்மயம் அகூபாரே யோன்யாமண்ட மஜீஜநத் ||

(லிங்கபுராணம் பூர்வகாண்டம் 20-வது அத்யாயம்)

இங்கு " மலைமகள் கொழுனன் பீஜி, நீ பீஜம், மற்றுயான் யோனி, தன்பீஜம் உலகமெலாமுன்னம் தோற்றுவிப்பதற்காக என்னிடம் வைத்தனன் " என்று சொல்லுமிடத்தில் சிவபெருமான் பீஜீ, ப்ரம்மா பீஜம், ஹரி யோனி. உலகமெல்லாம் உண்டாக்கும் நிமித்தம் சிவன் மகா விஷ்ணுவினிடத்தில் தனது பீஜமாகிய ப்ரம்மாவை வைத்தனன் என்று சொல்லப்படுகிறது.

தவிரவும், ஸ்காந்தம் சங்கர ஸம்ஹிதை ஆசுரகாண்டம் 13-வது அத்யாயம் 8-வது சுலோகத்தில்

𑌤𑍍𑌵𑌂𑌮𑍇 𑌚𑌤𑌸𑍍𑌰𑍂𑌣𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌶𑌕𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌹𑍍𑌵𑌯𑌾 ।
𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌥𑌾 𑌪𑍁𑌰𑌾 𑌤𑍍𑌵𑌾𑌂𑌤𑍁 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌜𑌂 𑌚𑌾𑌪𑍍𑌯𑌜𑍀𑌜𑌨𑌤𑍍 ॥

த்வம்மே சதஸ்ரூணும் மத்யே சக்தீநாம் புருஷாஹ்வயா |
சக்திஸ்ததா புரா த்வாந்து புக்த்வாஜம் சாப்யஜீஜநம் ||

நீ என்னுடைய நான்கு சக்திகளுள் புருஷன் என்னும் சக்தியாதலால் உன்னோடு சேர்ந்து பிரமனைப் பெற்றோம் என்று சொல்லப்பட்டிருப்பதையும்,

" எங்களுக்கு அருள்செய்கின்ற ஈசனை
வாசவார் குழலாள் மலைமங்கைதன்
பங்கனை பங்கில்வைத் துகந்தான் தன்னைப்
* * * கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே "
(7-10-3)

என்றும் பாடியிருக்கிறார்.

நம்மாழ்வாரும்

" நாகத்தணையானை * * * *
மாகத்திளமதியம் சேரும் சடையானை
பாகத்து வைத்தான் றன்பாதம் பணிந்தேனே "
என்று பாடியிருக்கிறார். (திருவாய்மொழி—10-4-6)

மேற்கண்ட பாசுரங்களில் 'வலத்தே வைத்து', 'பங்கில் வைத்து', 'பாகத்து வைத்தான்' என்னும் பதங்களால் மேலே சொல்லியபடி பரமசிவனுடைய இடது பாகத்தில் மகாவிஷ்ணுவோ அல்லது பராசக்தியோ இடங்கொண்டிருப்பதாக ஆழ்வார்கள் அறிவிக்கின்றனர்.

ப்ரம்மாண்ட புராணத்தில்

𑌉𑌮𑌾 𑌯𑌾 𑌸𑌹𑌰𑌿𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌯𑍋𑌹𑌰𑌿𑌸𑍍𑌸𑌾 𑌶𑌿𑌵𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 ।

உமா யா ஸஹரிஸ்ஸாக்ஷாத் யோஹரிஸ்ஸா சிவாஸ்ம்ருதா | என்றும்,

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌤𑌦𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑌾𑌹𑌿𑌤𑌮𑍍 ।
𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌭𑌿𑌪𑌙𑍍𑌕𑌜𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌃 𑌪𑌞𑍍𑌚𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 ॥

ப்ரக்ருதிஸ்த்வம் புமாந் ருத்ரஃ த்வயி தத்வீர்யமாஹிதம் |
த்வந்நாபி பங்கஜாஜ்ஜாதஃ பஞ்சவக்த்ரஃ பிதாமஹஃ|| என்றும்,

ஆதித்யபுராணத்தில்

𑌨𑌾𑌵𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌭𑍇𑌦𑍋 𑌮𑌚𑍍𑌛𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 ।

நாவயோர் வித்யதே பேதோ மச்சக்திஸ்த்வம் நஸம்சயஃ |
என்றும் சொல்லப்பட்டிருக்கிறதையும் பார்க்க.

“பிறைதங்கு சடையானை வலத்தேவைத்து” என்னுமிடத்தில் வலத்தே தோற்றுவித்து என்று சொல்லாமல் “வலத்தே வைத்து” என்று சொல்லியிருப்பதாலும், ப்ரம்மாவைச்சொல்லுமிடத்து “ப்ரம்மாவை வைத்து” என்று சொல்லாமல் “தன் உந்தியில் ப்ரம்மனைத் தோற்றுவித்து” என்று சொல்லியிருப்பதாலும், வலப்பாகம் ஆண்பாகம், இடப்பாகம் பெண்பாகமென்ற நியாயத்தாலும் (வாமா = ஸ்திரீ) விஷ்ணுமூர்த்தி சக்திஸ்தானமென்றும், ஈசுவரமூர்த்தி புருஷஸ்தானமென்றும் ஏற்படுகிறது. சக்தி சுவரூபமானது ஆண்பாகமான பரமசிவனைத் தன் வலத்தில் வைத்துக்கொள்ளும்போதுதான் உலகத்திற்கு பீஜமான பிரம்மாண்டத்தைத் தோற்றுவிக்கும் வன்மைவாய்ந்ததாகிறது. மேலும், திருமழிசையாழ்வார் இயற்பா 65-வது பாட்டில் “மாதாய மாலவனை—மாதவனை” என்னுமிடத்தில் திருமாலே மாது அல்லது பெண், அதாவது சக்தியானர் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். இதை அனுசரித்தே ஆதி சங்கரபகவத்பாதாளும், “பரணத்வம் வ்ருஷபத்வம்” என்று ஆரம்பிக்கும் சிவானந்தலஹரி சுலோகத்தில் “அர்த்த வபுஷா பார்யாத்வம்” என்று மகாவிஷ்ணுவைக் குறிக்கும்போது திருவாய்மலர்ந்திருக்கிறார். ஆதலால் மகாவிஷ்ணுவே பரமசிவனுடைய பராசக்தியென்பது ஆழ்வார்களுடைய திருவுள்ளமென்பது வெளிப்படை.

2. கேசவார்த்தமூர்த்தி (= ஹரிஹரமூர்த்தி)

திருமங்கையாழ்வார்

“ திருத்தனை * * * *
* * * கண்ணுதல் கூடிய
அருத்தனை யரியை * * *
* * * கண்டுகொண்டேனே. ”

(பெரிய திருமொழி—7-10-7)

என்று சொல்லியிருப்பது மகாவிஷ்ணு தன்னுடைய சரீரத்தில் ஒரு பாதியில் நெற்றியில் கண்ணையுடையவனாகிய பரமசிவனை வைத்திருக்கிறார் என்பதைத் தெரிவிக்கிறது. "அருத்தன்" என்னும் பதத்தால் ஆழ்வார் கேசவார்த்தமூர்த்தியென சிவாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஈசுவர நாமத்திலுள்ள "அர்த்த" மென்னும் பதத்தைக் குறிக்கிறார். அவரே "மழு வியல்படையுடையவனிடம் மழைமுகில் தழுவியவுருவினர் * * கணபுரம் அடிகள் தம் இடமே."

(பெரிய திருமொழி—8-7-6)

என்று பாடியிருக்கிறார். இந்தப் பாசுரத்திலும் மழுவைத் தரித்திருக்கும் பரமசிவனுடைய அம்பிகையின் ஸ்தானமாகிற இடது பாகத்தில் பொருந்திய கார்மேகம்போன்ற மேனியை உடையவர் மகாவிஷ்ணுமூர்த்தியென்று ஏற்படுகிறது.

பேயாழ்வார் திருப்பதி க்ஷேத்ர பாசுரத்தில்
"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும் சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும் திரண்டருவிபாயும் திருமலைமேலெந்தைக்கு இரண்டுருவுமொன்றாயிசைந்து"

(இயற்பா 63) என்றும்,

நம்மாழ்வார்

"உடம்பினால் * * * *
தடம்புனல் சடைமுடியன் தனியொரு கூறமர்ந்துறையும்
உடம்புடையான்" (திருவாய்மொழி—4-8-10) என்றும்,

பொய்கையாழ்வார்

"கையவலம் புரியும் * * *
* * * மாமதிள் மூன்றெய்த
இறையான் நின்னாகத்திறை" (இயற்பா 28) என்றும்

பாடியிருக்கிறார்கள். இப்பாட்டுகளிலும் சங்கரனும் நாராயணனும் ஒன்றாய் அமைந்த மூர்த்தியாகவிருக்கும் மகாவிஷ்ணு வர்ணிக்கப்படுகிறார்.

சிவபராக்ரமத்தில் ஒரு க்ரமத்தில் பரமசிவனுக்கு 25-மூர்த்திகளும், மற்றொரு க்ரமத்தில் 64 மூர்த்திகளும் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. அவ்விரு க்ரமங்களிலும் கேசவார்த்தமூர்த்தி அதாவது ஹரிஹரமூர்த்தி அல்லது சங்கரநாராயணமூர்த்தி காணப்படுகிறார். இந்த மூர்த்தி மைசூரிலும் மகதத்திலுமுள்ள ஹரிஹர க்ஷேத்ரங்களிலும், தென்பாண்டி நாட்டிலுள்ள சங்கர நாராயணன் கோவிலிலும் விளங்குகின்றார். ஜீவர்களின் புண்ய பாபங்களாகிற கர்மபலன்களைப் போக்கி அவர்களுக்கு முக்திக்கு ஹேதுவான ஸ்வாத்மசக்திநிபாதத்தைக் கொடுப்பதற்காகப் பரமசிவன் இவ்வுருவமா யெழுந்தருளியிருக்கிறார்.

𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍇 𑌸𑌮𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌸𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌈𑌶𑍍𑌵𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌶𑌕𑍍𑌤𑌿𑌨𑌿𑌪𑌾𑌤𑌂 𑌹𑌰𑌿𑌹𑌾𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥

புண்யபாபே ஸமீக்ருத்ய சாத்மனு மீஶ்வரேஶ்வர: |
ப்ரயச்சதி ஸ்வாத்மசக்திநிபாதம் ஹரிஹராத்மனு ||
(ஸ்காந்தபுராணம் சங்கர ஸம்ஹிதை உபதேசகாண்டம் அத்-9)

இவ்விரு மூர்த்தங்களையும் ஆழ்வார் 'இசைந்து' பாடினதற்குக் காரணம் ஒன்று உள்ளும், மற்றொன்று புறமும் சத்வ குணம் பொருந்திய மூர்த்தியென்பதினாலேயே. விஷ்ணுமூர்த்தி சத்வமூர்த்தியென்பது ஸ்ரீபாகவதம், விஷ்ணுபுராணம்முதலியவைகளில் ப்ரசித்தமாயிருக்கிறது. சுவேதாசுவதரோபனிஷத்தில் ஸ்பஷ்டமாகப் பரமசிவனை ¶ ஸத்வப்ரவர்த்தகன் என்று கூறப்பட்டிருக்கிறது.

¶ பரமேசுவரன் பிராணிகளுக்கு சுத்த ஸத்வ ப்ரவர்த்தகரானபடியால்தான்

𑌅𑌗𑍍𑌨𑍇𑌶𑍍𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌤𑌾𑌮𑌸𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌂 ।
அக்னேஶ்ஶிவஸ்ய மாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்திதம் |

சிவமூர்த்தி ஸத்வமூர்த்தி என்பது மற்றும் யஜுர்வேத மண்டலப் பிராம்மணோபனிஷத், கைவல்ய உபநிஷத், அதர்வணவேத மாண்டூக்யோபனிஷத், ஸ்காந்தபுராணத்திலுள்ள சூதஸம்ஹிதை, சிவாஷ்டோத்தரம் முதலிய பல இடங்களிலும், பொய்கையாழ்வாருடைய "பொன்திகழும் மேனி" என்னும் (இயற்பா 98) பாசுரத்தில் "புரிசடையம் புண்ணியனும்" என்னும் திருவாக்கினாலும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட உபநிஷத்துக்களில் உமாசகாயனாகவும், ஐந்து முகங்களோடு கூடினவனுயுமுள்ள முக்கண்ணனாகிய பரமசிவனை சாந்தஸ்வரூபமாகவும் ப்ரசாந்தஸ்வரூபமாகவும் விளக்கப்பட்டிருக்கிறது. சாந்தஸ்வரூபம் ஸத்வகுணத்தினுடைய பூர்ணாம்சம். ஸ்காந்தத்தின் ஸாரமாகிய சூதஸம்ஹிதையில் பரமசிவனுக்கு சத்வகுணம் உபபத்தியோடு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆழ்வார் "புரிசடையம் புண்ணியனும்" என்று திருவாய்

என்று மாத்ஸ்யபுராணத்தில் தாமஸ கல்பங்களில் பரமேசுவரனுடைய மாஹாத்ம்யம் விசேஷமாகச் சொல்லப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தாமஸ கல்பங்களில் பிராணிகளுக்கு அக்ஞானமென்னும் இருட்டு அதிகமாக இருக்குமாதலால் இருட்டுக்காலங்களில் இருட்டையகற்ற மகாப்ரகாசமான அக்னிஜ்வாலை வளர்க்கப்படுவதுபோல் உள்ளத்தின் இருட்டு அதிகமாகயிருக்கிற தாமஸ கல்பங்களில் மகாஸத்வப்ரகாச ப்ரவர்த்தகரான பரமேசுவரருடைய மாகாத்ம்யம் சொல்லப்படுகிறது. அந்தந்த கல்பங்களுக்கே ஸாத்விக ராஜஸ தாமஸ குணங்கள் இப்புராண வாக்யத்தில் சொல்லப்பட்டிருப்பதால் புராணங்களுக்கோ, புராணம் செய்தவருக்கோ ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்னும் விபாகம் கிடையாதென்று பெரியோர்களால் சித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஸகல புராணங்களும் லோகானுக்ரஹத்திற்காகப் பரமேசுவரனுடைய சங்கல்பத்தினால் ப்ரவர்த்திக்கப்பட்டவை. எல்லாவற்றையும் சமன்வயம் செய்து பார்க்கும்பொழுது ஒரே அபேத தத்வத்தைத்தான் அறிவிக்கின்றன.

மலர்ந்திருப்பதினாலும், புண்ணியத்தன்மை ஸத்வகுணத்தின் நிறைவினாலேற்படுவதாலும் பரமசிவனுடைய ஸத்வகுண ஸ்வரூபம் ஒளிக்கிறது. ஆனால் விஷ்ணுமூர்த்திக்கு ஸத்வாம்சம் சொல்லுமிடங்களில் ப்ரம்மாவுக்கு ராஜஸ குணமும், மகாவிஷ்ணுவுக்கு ஸத்வ குணமும், பரமசிவனுக்குத் தாமஸ குணமும் சொல்லப்பட்டும், பரமசிவனுக்கு ஸத்வாம்சம் சொல்லுமிடங்களில் பிரம்மாவுக்கு ரஜோ குணமும், மகாவிஷ்ணுவுக்கு தாமஸ குணமும், பரமசிவனுக்கு ஸத்வ குணமும் சொல்லப்படுவதால் அடியார்களுக்குச் சந்தேகம் நிகழலாம். அச்சந்தேகங்களைப் பதினெண்புராணங்களுக்கும் அதிகாரியான ஸூதபுராணிகர் தம் சொந்த ஸம்ஹிதையான ஸூதஸம்ஹிதையில் தெளிவு படுத்தியிருக்கிறார். ஸூதஸம்ஹிதையில் ஸூதகீதையில் 2-வது அத்யாயத்தில் இவ்விஷயம் வ்யவகரிக்கப்பட்டுள்ளது.

𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌸𑌨𑌾𑌭𑍇𑌦𑌭𑍇𑌦𑌿𑌤𑌾𑌯𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌰𑍍𑌷𑌭𑌾𑌃 ।
𑌮𑌾𑌯𑌾 𑌸𑌾 𑌪𑌰𑌭𑍇𑌦𑌸𑍍𑌯 𑌹𑍇𑌤𑍁𑌰𑍍𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃॥௧௬॥

𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌶𑍁𑌕𑍍𑌲𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌶𑍍𑌚 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌰𑌕𑍍𑌤𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌦𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇॥௧௮॥

𑌶𑍌𑌕𑍍𑌲𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑍁𑌣𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌂 𑌰𑌾𑌗𑍋𑌜𑌾𑌤𑍋 𑌰𑌜𑍋 [𑌗𑍁𑌣𑌾𑌤𑍍 ।
𑌕𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍍𑌯𑌂 𑌤𑌮𑍋𑌗𑍁𑌣𑌾𑌜𑍍𑌜𑌾𑌤 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌮𑌾𑌸𑌤𑌃॥௧௯॥

[illegible] 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
[illegible] 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑍋𑌽𑌖𑌿𑌲𑌾𑌃 ॥ ௨௰ ॥

குணானாம் வாஸனாபேத பேதிதாயா த்விஜர்ஷபா: |
மாயா ஸா பரபேதஸ்ய ஹேதுர்நாந்ய: ப்ரகீர்த்தித: ||

ருத்ரஸ்ய விக்ரஹம் சுக்லம் க்ருஷ்ணம் விஷ்ணோஶ்ச விக்ரகம் |
ப்ரம்மணோ விக்ரஹம் ரக்தம் சிந்தயேத் புக்திமுக்தயே ||

மௌக்ல்யம் ஸத்வகுணஜ்ஜாதம் ராகோ ஜாதோ ரஜோகுணாத் |
கார்ஷ்ண்யம் தமோகுணஜ்ஜாத மிதிவித்யாத் ஸமாஸத: ||
பரதத்வைகதாபுத்யா ப்ரஹ்மாணம் விஷ்ணுமீசுவரம் |
பரதத்வதயாவேதா: வதந்தி ஸ்ம்ருதயோபிச ||

வெண்மை, சிவப்பு, கறுப்பு இம்மூன்று வர்ணங்களும் முறையே ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களைக் குறிக்கின்றனவென்றும், பரமசிவன் ஸ்படிகம்போல தவளமான வெண்மை நிறமான மூர்த்தியாதலால் ஸத்வமூர்த்தியென்றும், ப்ரம்மா சிவப்பு மூர்த்தியாதலால் ரஜோமூர்த்தியென்றும், விஷ்ணு கரிய மூர்த்தியாதலால் தமோ மூர்த்தியென்றும், மும்மூர்த்திகளுக்குத்தான் ஸத்வம் முதலிய குணங்களென்றும், இம் மும்மூர்த்திகளுக்கு உள்ளேயிருக்கும் ஒன்றான பரம்பொருளோ முக்குணங்களையும் கடந்ததென்றும் பொருள்படும்படி அறிவிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் பரமசிவனுடைய மூர்த்தி வெண்மையான ஸத்வமூர்த்தியாயிருப்பினும் வெளிக்காரியம் சம்ஹாரமென்னும் தமோகுண காரியமாதலால் அவர் வெளிக்காரியத்தில் தமோ குணமென்றும், மகாவிஷ்ணுவின் மூர்த்தி கரிய தமோகுணமூர்த்தியாயிருந்தாலும் வெளிக்கார்யம் ஸத்வகுண காரியமாம் பரிபாலன காரியமாதலால் மகாவிஷ்ணு வெளிக்கார்யத்தில் ஸத்வகுணமென்றும், பிரம்மாவானவர் மூர்த்தி, கார்யம் இருவகையிலும் சிவப்பும் சிருஷ்டியுமான ரஜோகுணஸ்வரூபமாதலால் உள்ளும் புறமும் ரஜோகுண மூர்த்தியென்றும் வியவகரிக்கப்பட்டுள்ளது. பரமசிவனுடைய ஆனந்ததாண்டவம் ஸத்வகுணமயமான மகாஜாக்ரதாவஸ்தையாகவும், ப்ரம்மாவினுடைய சிருஷ்டி ரஜோகுணமயமான மகாஸ்வப்னாவஸ்தையாகவும், மகாவிஷ்ணுவினுடைய மகாநித்ரை தமோகுணமயமான மகாசுஷுப்தியாகவும் மற்றும் சில இடங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வெல்லா விஷயங்களையும் ஸமன்வயப்படுத்தி சூதஸம்ஹிதைக்கு வ்யாக்யானம்

செய்த ஸ்ரீ வித்யாரண்யசுவாமிகள் மும்மூர்த்திகளுமான ஒரே பரப்ரம்மம் முக்குணங்களேயும் கடந்தது என்ற தத்வத்தை மேற்கொண்டு அம்மூர்த்திகளுக்கு குணசம்பந்தத்தைச் சொல்வது சரீரவர்ணம் என்னும் உள் உபாதியினுலும், ப்ரபஞ்ச காரியமென்னும் வெளி உபாதியினுலுமே ஏற்படுகிறதென்றும், அந்த முறைப்படி பரமசிவனுக்கு அந்தஃ ஸத்வமென்றும், பாஹ்யத்தில் தமஸ் என்றும், பிரம்மாவிற்கு அந்த: ரஜஸ் என்றும், வெளியிலும் ரஜஸ் என்றும், மகாவிஷ்ணுவிற்கு அந்தஸ்தமஸ் என்றும் பாஹ்யத்தில் ஸத்வமென்றும் தெளிவு படுத்தியிருக்கிறார்கள்.

பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியிலும் "அரன் நாரணன் நாமம்" 'என்று தொடங்கி ஹரிஹராபேதத்தைத் தெளிவாக்கும் பாசுரத்திற்கு முந்தியதாயும் 'அரன்' என்னும் சொல்லோடு முடிவதாயுமுள்ள

" நெறிவாசல் தானேயாய் நின்றுனே ஐந்து
பொறிவாசல் போர்க்கதவம் சார்த்தி — அறிவானும்
ஆலமரநீழல் அறம்நால்வர்க்கு — அன்றுரைத்த
ஆலமமர் கண்டத்தரன் " (முதல் திருவந்தாதி—4)

என்னும் பாசுரம் ஆலமரத்தின் நிழலில் எழுந்தருளியிருக்கும் அரனும் தக்ஷிணமூர்த்தி 'அறம்' என்னும் தர்மத்தை யுபதேசித்ததாகக் கூறுகிறது. நிவ்ருத்தி தர்மமாம் ஞானத்தைச் சின்முத்திரையினுல் சனகாதி நால்வருக்குபதேசித்தருளுகின்ருர் நஞ்சுண்ட நீலகண்டப்ரபு. தர்மமும் ஞானமும் சத்வகுணத்தினம்சங்கள். ஆழ்வாருடைய அபிப்பிராயப்படியும் சனகாதியருக்கு வழிகாட்டும் தக்ஷிணமூர்த்தி ஸத்வஸ்வரூபி 'என்றே முடிவாகிறது.

3. அர்த்தநாரீசுவரமூர்த்தி

நம்மாழ்வார் அவருடைய திருவாய்மொழியில்

"என்மலைமகள் கூறன்றன்னை

.... எயில்மூன்றெரித்த

வென்று * * காணேனே." (7—6—7)

என்று பாடியிருக்கிறார். இந்தப் பாசுரத்தில் "என் மலைமகள் கூறன்றன்னை. மூன்றெரித்து வென்று" என்னுமிடங்களில் மலைமகளாகிய பார்வதியை அர்த்தபாகமாக இடது பக்கத்தில் வைத்துக்கொண்டவரும், திரிபுரசம்ஹாரம் செய்தவருமான அர்த்தநாரீசுவர ஸ்வரூபமான பரமசிவனையே கூறுகிறார். பொய்கையாழ்வார் "கூற்றொருபான் மங்கையான் காப்பு" (இயற்பா 74) என்று காப்பிட்டிருக்கிறார்.

4. சிவபராக்ரமத்தின்படி மகேசுவரமூர்த்தங்கள் 25-ல் எட்டாவதான த்ரிமூர்த்தியாம் ஏகபாதமூர்த்தி.

நம்மாழ்வார் திருவாய்மொழியில்

"முனியே நான்முகனே முக்கண்ணப்பா என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே என்கள்வா
* * ஒன்றும் மாயம் செய்யேல் என்றனையே"
(10—10—1)

என்று சொல்லுமிடத்தில் "நான்முகனே, முக்கண்ணப்பா, கருமாணிக்கமே" என்றதால் முறையே அயன், அரன், அரி என்னும் மூவுருவங்களையும் விளக்குகிறார். "செய்யேல்" என்னும ஒருமையால் அவை தத்வத்தில் ஒன்றென்றும் விளக்குகிறார். மேலும்,

"காத்தஎன் கூத்தாவோ மலையேந்தி கல்மாரிதன்னைப்
பூத்தண்டுழாய்முடியாய்-புனைக் கொன்றையஞ்சடையாய்
வாய்த்த என் நான்முகனே வந்து என்னுயிர் நீயானால்."
(7—6—3)

என்றும் பாடியிருக்கிறார். இவ்விடத்தில் “ சூழாய்முடியாய், கொன்றை யஞ்சடையாய், நான்முகனே ” என்பனவற்றால் முறையே அரி, அரன், அயன் என்னும் மூவுருவையும் விளக்கி, “நீயானால்” என்று ஒருமையில் சொன்னதினால் மூன்றும் ஒன்றென்பது அவருடைய திருவுள்ளமென்று தெரிகிறது. அதே மாதிரி “ அமர்ந்த நாதனை * * * அமர்ந்த மாயோனை, முக்கண்ணம்மானை, நான்முகனை அமர்ந்தேனே ” (8—4—10) என்று பாடுமிடத்திலும் இதையே தெரிவிக்கிறார். இந்த மூர்த்தித்ரயமாயுள்ள ரூபமானது பரமசிவனது வலதுபுறத்தில் ப்ரம்மாவையும், இடது புறத்தில் விஷ்ணுவையும் கொண்டு, நடுவில் த்ரிநேத்ரமுடைய மூர்த்தியாக விளங்கும் $ ஆத்மாக்களின் ஜாக்ரத் ஸ்வப்ன சுஷுப்தியென்னும் மூன்றவஸ்தைகளையும் உண்டாக்கவும் அழிக்கவும் ஏற்பட்ட மகேசுவரமூர்த்தங்கள் 25-ல் 8-வது மூர்த்தியாகும். [மேற்சொல்லப்பட்ட பாசுரங்களில் எல்லாம் முக்கண்ணுடைய பரமசிவனை மத்தியிலும், ப்ரம்மாவையும் மகாவிஷ்ணுவையும் அவருடைய இருபக்கத்திலும் சொல்லியிருப்பது கவனிக்கத்தக்கது.] இம்மூர்த்தி ஏகபாதமூர்த்தியாக மதுரையிலும், திருவாரூருக்கடுத்த தப்பளாம்புலியூர் என்னும் மண்டூகவியாக்ரபுரத்திலும் திருக்கோவில்களில் காணலாம். இந்த விவரத்தையே ஸ்காந்தம் சங்கர ஸம்ஹிதை உபதேச காண்டம் 9-வது அத்யாயத்தில்

$ 𑌯𑍁𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑍌 𑌗𑌾𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂
𑌸𑌨𑌾𑌤𑌨𑍌 । 𑌅𑌯𑌂 𑌮𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾
𑌲𑍋𑌕 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 । 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌚 𑌮𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾
𑌹𑍃𑌦𑌯𑍋𑌦𑍍𑌭𑌵𑌃 ॥

யுவாம் ப்ரஸூதௌ காத்ரேப்யோ மம பூர்வம் ஸநாதநௌ |
அயம் மே தக்ஷிணே பார்ச்வே ப்ரம்மாலோக பிதாமஹ: |
வாமபார்ச்வேச மே விஷ்ணுர் விஸ்வாத்மா ஹ்ருதயோத்பவ: ||

—லிங்கபுராணம்

𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌤𑌤𑍍𑌤𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑍋𑌯𑌤𑌃 ।
𑌆𑌤𑍍𑌮𑌨𑍋𑌪𑌿 𑌤𑌤𑍋𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌤𑍍𑌰𑌯𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌯 𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ॥

த்ரிமூர்த்தி மூர்த்திமாதத்தே பகவா னீஸ்வரோயதஃ |
ஆத்மநோபி ததோ மூர்த்திதரயம் விந்தத்ய யத்நதஃ ||

என்று கூறப்பட்டிருக்கிறது.

நம்மாழ்வார்

“ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரனென்னுமிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் இருபசையறுத்து
நன்றென நலம்செய்வது அவனிடை நம்முடைநாளே.”

(1—3—7)

என்னும் பாசுரத்தில் அவர்கள் மூவரையும் நன்றாக வழிபட வேண்டுமென்றும் சொல்லுகிறார். மும்மூர்த்திகளையும் பேதகமாக நினைப்பவர்களுக்கு மோக்ஷமில்லையென்பது ஆழ்வாருடைய திருவுள்ளம் என்பதும் நன்றாய் வெளியாகிறது. இருபசையறுவிட்டால் மோக்ஷமேது? சிவன் வேறு, விஷ்ணு வேறு என்று நினைப்பவர்களுக்கு ராகத்வேஷம் என்னும் இருபசைகள் எப்படி விடும்? ராகத்வேஷம் விடாவிட்டால் மோக்ஷமேது?

கம்பநாட்டாழ்வாரும்,

“அரனதிகனுலகளந்த வரியதிகனென்றுரைக்கு மறிவிலோர்க்குப் பரகதி சென்றடை வரியபரிசேபோற் புகலரிய பண்பிற்றாமாய்” (கிஷ்கிந்தா காண்டம் நாடுவிட்ட படலம் 24) என்னும் பாசுரத்தில் அரனதிகம், அரியதிகம் என்றுரைப்போர்க்குப் பரகதியில்லையென்று கோஷிக்கவில்லையா? அன்றியும் நம்மாழ்வாரே,

“அவாவறச்சூழ் அரியை அயனை அரனை அலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும் முடிந்த
அவாவிலந்தாதி இப்பத்து அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே”

(10—10—11)

என்று பாடியிருக்கிறார். மூவரும் ஒன்றெனும் தத்வத்தை அறிந்தாலல்லாது அவா அறாது என்று நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் இறுதியில் முரசறைகிறார். அவர் வீடு பெற்றதும் த்ரிமூர்த்தி அபேதத்தாலேயே. இங்கு முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமொன்றிருக்கிறது. நம்மாழ்வார் அவருடைய பாசுரங்களில் எந்தவிடத்தில், எம்மாதிரி கூறியிருந்தாலும் தம்முடைய கடைசி பாசுரத்தில் "அரியை அயனை அரனை யலற்றி வீடுபெற்ற" என இறுதியில் அரநாமத்தை வைத்துப் போற்றியிருப்பது திருஞானசம்பந்தர், "அரநாமமே சூழ்க" என்று திருவாய்மலர்ந்தருளியிருப்பதற்கு இதுதான் மூலமோ என்று திகைக்கும்படி செய்கிறது.

5. மகாவிஷ்ணுவும் அவரடியாரும் விபூதி தரித்தார்கள்.
"நீறில்லா நெற்றி பாழ்" — ஔவையார்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில்

"கரியமேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும்
பெரியகோலத்த தடங்கண்ணன் * * *" (4—5—6)

என்று பாடியிருக்கிறார். இவ்விடத்தில் மகாவிஷ்ணு வெண்மையான திருநீற்றை யணிந்திருக்கும் கரியதான திருமேனியையுடையவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே பெரியாழ்வாரும் "காப்பிட வாராய்" என்று தம் திருமொழி 2-ம் பத்தில் 8-ம் திருமொழியில் சொல்லியிருப்பது கண்ணனுக்குக் காப்பென்னும் திருநீறை யசோதை அணிவித்தாள் என்பதைக் காண்பிக்கிறது. நம்மாழ்வார் "உடையார்ந்த வாடையன் கண்டிகையன்"§ (திருவாய்மொழி—3-7-4) என்

---

§ 'கண்டிகையான்' என்னுமிடத்தில் 'கண்டிகை'யென்பதினால் ஆழ்வார் ருத்ராக்ஷத்தைக் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது. கண்டிகை என்னும் சொல் உலக வழக்கத்திலும் நூல் மரபிலும் ருத்ராக்ஷத்தையே குறிக்கிறது. சிவரகஸ்யம் — பத்மாவதி சருக்கம் 'நன்னதிமூழ்கி — பூதி கண்டிகை நயத்தணிந்தே.

றும் சொல்லியிருக்கிறார். நீறு என்றாலும், பஸ்மம் என்றாலும ஒன்றுதான். ஸம்ஸ்கிருத பாஷையில், பஸ்மமாகச் செய்யப் பட்டது பஸ்மம் என்று ஏற்படுகிறது. அப்படியே தென்மொழி யிலும், நீற்றுப்போனதே நீறாகும். இந்த இரண்டு பெயர் களும் விபூதியொன்றிற்குத்தான் ஏற்படுமே தவிர வேறொன் றிற்கும் ஏற்படாது.

* விபூதியே நீறாகும். 'காப்பிட வாராய்' என்று சொல்லு மிடத்து, 'காப்பு' என்பதற்கு விபூதியென்றே பொருள்கொள்ள

---

* விபூதி என்ன நிறம்? வெண்மை நிறம். வேறு நிறத்துப் பொருள் களெல்லாம் அக்னி புடம்போட்டு எரிக்கும்போது சிவப்பு, மஞ்சள், ஊதா முதலிய சாயங்கள் அழிந்து முதலில் கருமையாகவும், பின்னர் வெண்மையாகவும் ஆகிவிடுகின்றன. "சாயம் வெளுத்துப்போகிறது" என்பது பழமொழி. உண்மை நிற்கிறது. உண்மையே வெண்மை. நாலுவர்ணக்குருதியான உலகத்திற்கு கரிய மாலும் வெளிய சிவபிரா னுமே மூலம். ஹரியும் சிவனும் ஒன்று. நவீன பூத தத்துவசாஸ்திரத் தில் கரியே வைரமென ஏற்படுகிறது. மற்றெப்பொருளையும் அக்னி, புடம்போடும்பொழுது நீற்ற வெண்மையான பஸ்மமாக்கிவிடுகிறது. நீற்ற பஸ்மத்தைத் திரும்பவும் அக்னிபுடம் போட்டால் பஸ்மம் பஸ் மமே. எவ்விதத்திலும் உரு மாறுவதில்லை. மாறாத நிலையே உண்மை. இவ்வுண்மையே சிவம். உலகமெல்லாம் அக்னிப்புடம் போடும்பொழுது பஸ்மமாய் நிற்பதுபோல் உலகமெல்லாம் ஞானபுடம் போடும்பொழுது சிவமாய் நிற்கிறது. எல்லாவற்றிற்கும் பரம காரணம் சிவமே. உண்மை ஞானநிலையில் பார்த்தால் எப்பொருளும் சிவமாகிவிடுகிறது. சிவத்தை ஞானநிலையில் பார்த்தால் விபூதியைப்போல் சிவம் சிவமாகவே நிற்கிறது. புடம் போடும் சமயத்தில் மாறாத பொருளே உண்மைப் பொருள். மற்றவையெல்லாம் தோற்றமாம் சாயம். வெண்மையே உண்மை. பஸ்மம் வெண்மையே. சிவம் வெண்மையே. சிவமே விபூதி. இவ்வுண் மையை மாணிக்கவாசக சுவாமிகள் சிங்களத்திலிருந்து வாதுக்கு வந்த புத்தர்களுக்கு வெந்தழலிலே நீத்த கோமயப்பழத்தை உபமானமாகக் காட்டி அப்பிரமாணத்தைக்கொண்டு உபதேசித்தருளினார்.

வேண்டும். "உடையவர் சூர்ண விளக்கம்" என்று பெயருள்ள நூலியற்றிய வைஷ்ணவரொருவர், அந்தப் புத்தகத்தில் பாஷ்யகாரராகிய ராமானுஜருடைய காலத்திற்கு முன்னிருந்த வைஷ்ணவர்கள் பஸ்மதாரிகளாகத்தான் இருந்தார்களென்றும், பின்னர் ராமானுஜர் தான் புதிதாகத் திருமண்ணை ஏற்படுத்தினுரென்றும் பொருள்பட எழுதியிருக்கிருர். தவிரவும், 'காப்பு' என்றுல் திருநீறு என்று சூடாமணிநிகண்டில் "திருநீறு பஸ்மம் பொடியோடு விபூதி காப்பாம்" என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ‡

நம்மாழ்வார் திருவாய்மொழியில்,

"இவளைப் பெறும் பரிசு இவ்வணங்காடுதலன் றந்தோ —
* * * *
* * * * திருநாமத்தால்
தவளப்பொடிக்கொண்டு நீர்இட்டிடுமின் தணியுமே." (4-6-5)

---

‡ காப்பு என்ற சொல்லுக்கு அவயவப்பொருள் கொண்டால் 'ரக்ஷை' என்ற அர்த்தமேற்படுகிறது. ரக்ஷை என்னும் சொல்லும் விபூதிக்குப் பெயராக நிகண்டிலும் புராணங்களிலும் அமைந்திருக்கின்றது. யக்ஞங்களிலும் ஹோமங்களிலும் ரக்ஷை என்னும் பெயரினுலேயே பஸ்மத்தைத் தரிக்கின்றுர்கள்.

भूतिर्भसितभस्मनी क्षारो रक्षा च ।
பூதிர்பஸிதபஸ்மனீ க்ஷாரோ ரக்ஷா ச | — அமரகோசம்

भर्त्सनात् सर्वपापानां पाशानां च महामुने ।
भस्मेति कीर्त्यते रक्षा रोगाणां चापि भर्त्सनात् ॥
பர்த்ஸனுத் ஸர்வபாபானும் பாசானுஞ்ச மகாமுனே |
பஸ்மேதி கீர்த்யதே ரக்ஷா ரோகாணுஞ்சாபி பர்த்ஸனாத் ||

भयेभ्यो रक्षणाद्रक्षा ।
பயேப்யோ ரக்ஷணுத்ரக்ஷா | வாஸிஷ்ட-லிங்கம்

भूतिर्भूतिकरी पुंसां रक्षा रक्षाकरी पुनः ।
பூதிர்பூதிகரீ பும்ஸாம் ரக்ஷா ரக்ஷாகரீ புனః | — மாதவீய ஸ்ம்ருதிரத்ன

என்று விபூதியினால் ஸ்நானம் செய்விக்கும்படியும், அப்படிச் செய்தால் சரீரத்திலிருக்கும் உபாதி தணியுமென்றும் சொல்லுகிறார். திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில், "கொல் நவிலும் மூவிலைவேல் கூத்தன் பொடியாடி" என்று சிவபெருமான் பூசியிருக்கும் திருநீற்றையே 'பொடி' என்னும் பதத்தால் விளக்குகிறார்.

விபூதி யணியும் மகாவிஷ்ணுவானவர் ருத்ராக்ஷம் அணிவது சிறப்பேயாகும். இவ்வாறு மகாவிஷ்ணு விபூதி ருத்ராக்ஷம் அணிந்தார் என்பது அதர்வணபஸ்ம ஜாபாலோபனிஷத் 2-வது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் இவ்விஷயம் ராமரஹஸ்யோபனிஷத், ப்ருஹத்ஜாபாலோபனிஷத், சாண்டில்யோபனிஷத் முதலிய அநேக இடங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. நம்மாழ்வார் திருவாய்மொழியில் "நீறுசெவ்வே யிடக்காணில் நெடுமாலடியாரென்றோடும்" (4—4—7) என்னும் பாசுரத்தில் திருநீறு பூசுவார் திருமாலடியார் என்று சொல்லியிருக்கிறார். இந்தப் பாசுரத்திலுள்ள நீறு என்ற பதத்திற்கு விபூதியென்றே ஆறாயிரப்படி முதலிய வைஷ்ணவக் கிரந்தங்களில் பொருள் செய்யப்பட்டிருப்பது இங்குக் கவனிக்கத்தக்கது. †

---

† இப்பாசுரத்தில் ஆழ்வார் என்னும் நாயகி பகவானிடத்தில் சிருங்கார மோகங் கொண்டு பகவத் பாகவத சம்பந்தமான சின்னங்களை எங்கே கண்டாலும் உடனே அவ்விடத்திலேயே பகவானும் பாகவதர்களும் ஆவிர்ப்பவித்ததாகத் தன்னை மறந்து அனுபவித்துக்கொண்டிருக்கும் அவஸ்தை வர்ணிக்கப்படுகிறது. திருத்துழாயைக் கண்ட இடங்களிலெல்லாம் பகவானுடைய வனமாலை இது என்று அனுபவிப்பதைப் போல் செவ்வையாகத் திருநீறு தரித்தவர்களையெல்லாம் பாகவதர்களே இவர்கள் என்று அனுபவிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

திருமாலடியாருக்குத் திருநீறு ஒரு பெரும் அணி என்பது ஆழ்வார் காலத்து மாத்திரம் அல்லாது சமீபகாலம் வரைகூட பிற்காலத்திலும்

6. ஆழ்வார் ஓரிடத்தில் பகவானை மும்மூர்த்திகளுக்கும் அதீதமான நிர்குணஸ்வரூபமாகவும் குறிப்பிடுகிறார்.

திருமங்கையாழ்வார்,

“ அறமுதல் நான்கவையாய் மூர்த்தி மூன்றாய்
இருவகைப்பயனாய் ஒன்றாய் விரிந்துநின்றனை ”

(*திருவெழுக்கூற்றிருக்கை*)

என்றும், *நம்மாழ்வார்* “*மூவர் முதல்வன் ஒரு மூவுலகாளி* ” (9-8-9) “*தானேருருவே தனிவித்தாய் தன்னின் மூவர் முத*

வழங்கிவந்திருப்பதாகத் தெரிகிறது. நமது நாட்டில் பகவத்பஜனை நடக்குமிடங்களிலெல்லாம் பகவந்நாம புண்டரீகங்களின் முடிவில் “ சத்குரு ஸ்வாமிக்கு ஜே ” என்ற புண்டரீகமும் கோஷிக்கப்படுகிறது. மேற்சொல்லப்பட்ட சத்குரு ஸ்வாமிகளே பகவந்நாமஸூத்ரம் கொடுக்கும் ஆதீனத்திற்கு மூலபுருஷரான பரமபாகவதர். ராமபக்தியே திருவுரு எடுத்தவர். பஜனை சம்பிரதாயங்களில் அவரைப்பற்றிய ஸ்துதி ஸ்லோகம் ஆரம்பத்தில் பாடப்படுகிறது. அந்த ஸ்துதியில் அவருடைய நெற்றி முக்கோடுடைய திருநீற்றால் அலங்கரிக்கப்பட்டதென்றும், அவருடைய நாவில் ஸ்ரீ ராகவனுடைய நாமாம்ருத தாரை பெருகிக் கொண்டிருக்கிறதென்றும், அவருடைய ஹிருதயத்தில் தாமரைக் கண்ணன் திருவிளையாடல் செய்து அருளிக்கொண்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

𑌯𑌸𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑌂 𑌕𑌨𑌕𑌾𑌪𑌕𑌾𑌮𑌸𑌦𑍃𑌶𑌂 𑌫𑌾𑌲𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌂
𑌵𑌾𑌣𑍀 𑌶𑍍𑌰𑍀𑌰𑌘𑍁𑌨𑌾𑌥𑌨𑌾𑌮𑌸𑍁𑌧𑌯𑌾𑌪𑍍𑌯𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑌕𑍃𑌦𑍍𑌧𑌾𑌰𑌯𑌾 ।
𑌚𑍇𑌤𑌸𑍍𑌯𑌮𑍍𑌬𑍁𑌜𑌲𑍋𑌚𑌨𑍋 𑌯𑌦𑍁𑌪𑌤𑌿𑌃 𑌕𑍇𑌲𑌤𑍍𑌯𑌲𑌂𑌰𑌾𑌧𑌯𑌾
𑌤𑌂 𑌵𑍈 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌰𑌾𑌮𑌦𑍇𑌶𑌿𑌕𑌵𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌹𑌂 𑌭𑌜𑍇 ॥

யஸ்யாங்கம் கனகாபகாமஸத்ருசம் பாலம் த்ரிபுண்ட்ராங்கிதம்
வாணீ ஸ்ரீ ரகுநாதநாமஸுதயாப்யார்த்ராஸக்ருத்தாரயா |
சேதஸ்யம்புஜலோசனோ யதுபதிঃ கேலத்யலம்ராதயா
தம்வை வேங்கடராமதேசிகவரம் ஸர்வாத்மனாஹம் பஜே ||

லாய்" (1—5—4) என்றும் கூறியிருக்கிறார்கள். த்ரிமூர்த்திகளும் முக்குணங்களைக்கொண்ட காரணத்தால் தோன்றியவர்கள். அம்மூவருக்கும் அதீதஸ்வரூபமான ஒன்று மும்மூர்த்திகளாக விரிந்தது என்பதால் அந்த ஸ்வரூபம் முக்குணம் கடந்த நிர்குணஸ்வரூபமென்று வெளியாகிறது.

7. ஆழ்வார்கள் சிவனடியார்களைப் போற்றல்.

"முருக்கிலங்கு கனித்துவர்வாய் பிள்ளை கேள்வன்
* * * *
இருக்கிலங்கு திருமொழிவா யெண்தோளீசற்கு
எழில்மாடம் எழுபது செய்து உலகமாண்ட
திருக்குலத்து வளர்ச்சோழன் சேர்ந்த கோயில்."
* * * *

(பெரிய திருமொழி 6—6—8)

ஆதியில் கொச்செங்கட்சோழன் என்று ஒரு சோழ சக்ரவர்த்தி இருந்தார். அவர் ஒரு பெரிய சிவனடியார். 63-நாயன்மார்களில் ஒருவர். பூர்வஜன்மத்தில் திருவானைக்காவில் சிலந்தியாயிருந்து சிவபெருமானை ஆராதித்தார். அவர் 72 சிவாலயத் திருப்பணிகளைச் செய்திருக்கிறார். அந்தத் திருப்பணிகளுக்கு யானையேறாத் திருப்பணி என்று பெயர். அதாவது யானை உள்ளே ஏறாதபடி படிவைத்துயரமாய்க் கட்டியிருக்கும் கோயில்கள் என்று அர்த்தம். இவர் நாச்சியார்கோவில் விஷ்ணு ஆலயத்தையும் நிர்மாணம் செய்திருக்கிறார். இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லும்போது ஆழ்வார்கூட, "எண்டோளீசற்குப் பணி எழுபது செய்து உலகாண்ட" என்று பரமசிவனையும் அவரது அடியாரையும் புகழ்ந்து போற்றுகிறார்.

8. ஆழ்வார் சிவ விஷ்ணு அபேதத்தைச் சொல்லுகிறார். இந்நூலின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட விஷயங்களிலிருந்து இருமூர்த்திகளும் ஒன்றாய்க் கலந்திருக்கும் தன்மை ஆழ்வார்

களுடைய திருவாக்குகளால் தெளிவாயிற்று. அவ்விரு வுருவங்களுக்கும் உள்ளேயுள்ள பரம்பொருள் ஒன்றேயென்னும் அபேத உண்மைத் தத்வத்தை ஆத்மஞானிகளுய்யும்பொருட்டு பரம கருணாநிதியான பொய்கையாழ்வார் கீழ்வரும் நிகரற்ற தத்வப்பாசுரத்தினால் வெளியிடுகிறார்.

" அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள்ளூர்தி
உரை நூல் மறை — உறையும் கோயில்வரைநீர்
கருமம் அழிப்பு அளிப்புக் கையதுவேல் நேமி
உருவம் எரி கார்மேனி—ஒன்று."(முதல் திருவந்தாதி-5)

இப்பாசுரத்தின் கடைசிப் பதத்தினால் பரம்பொருளை ஒன்றென முடித்திருக்கிறார். அவ்வொன்றான பரம்பொருளுக்கே பெயர் அரன் என்பதும், நாரணன் என்பதுமாம். அவ்வொன்றான பரம்பொருளுக்கே ஊர்தி எனப்படும் வாகனம் விருஷபமும் பக்ஷிராஜனுமாம். அவ்வொன்றான பரம்பொருளை உரைக்கும் நூல் வேதமாம் அல்லது அவ்வொன்றான பரம்பொருள் உரை செய்தது வேதமாம். அவ்வொன்றான பரம்பொருள் வசிக்கும் கோவில் கைலாச பர்வதமும் பாற்கடலுமாம். அவ்வொன்றான பரம்பொருளின் தொழில் உலகத்தை ஸம்ஹாரம் செய்வதும் ரக்ஷிப்பதுமாம். அவ்வொன்றான பரம்பொருளின் ஆயுதம் சூலமும் சக்ராயுதமுமாம். அவ்வொன்றான பரம்பொருளின் மேனி அக்னிஜ்வாலை வர்ணமும் கார்மேகவர்ணமுமாம். ஆழ்வார் இப்பாசுரத்தின் கடைசியில் 'ஒன்று' என்பதற்கு ஒரு அடைமொழியோ அன்வயமோ கொடுக்காமல் 'ஒன்று' என்று மாத்திரம் அருளியதிலிருந்து பரமாத்வைத தத்வத்தைப் பொழிந்தவராக ஆகிறார். ஆழ்வாருடைய அந்தரங்கத்தில் சிவனும் விஷ்ணுவும் வேறுபொருளல்லவென்றும், ஒரே பரம்பொருளென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகிறது.

இவ்விதம் ஆழ்வார்களுடைய திருவுள்ளத்தின் சமரசப் பெருந்தன்மையை யனுசரித்தே சிவபெருமான், திருமால் இவர்

களின் அநேகப் பெருங்கோயில்களில் பேதமற்ற ஸமரசப் பான்மை கொண்ட உத்ஸவங்களும், அதற்கான திருமண்டபங்களும் பண்டைக்காலத்தில் ஏற்பட்டிருந்தன. திருவானைக்கா கோவிலுக்குள் திருக்கல்யாணஉத்ஸவத்திற்கு தாரைவார்த்துக் கொடுப்பதற்காக ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீரங்கநாதரெழுந்தருளி வந்து தங்குவதற்கு ஒரு மண்டபமும், அவ்விதமே ஜம்புநாதர் வந்து தங்குவதற்காக ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதர் கோவில் சந்த்ரபுஷ்கரணிக்கரையில் ஒரு மண்டபமும் ஏற்பட்டிருந்தன. ஆனால் இப்பால் சுமார் 700, 800-வருஷங்களாக பேதவாதமான சைவ வைஷ்ணவ சித்தாந்தங்களேற்பட்டபிறகு ஸ்ரீரங்கநாதர் திருவானைக்கா எல்லைக்குள் வரக்கூடாதென்றும், ஸ்ரீஜம்புநாதர் ஸ்ரீரங்கம் எல்லைக்குள் வரக்கூடாதென்றும் இரு க்ஷேத்திரங்களும் ஒன்றாயிருந்ததுபோக இரண்டாக்கி, மத்தியில் கோணல் மாணலாக ஒரு எல்லை மதிலெடுக்கப்பட்டு இப்போதும் அது காணப்படுகிறது. அதனிரு பக்கங்களிலும் இரண்டு மூர்த்திகளுக்கும் எல்லைக்கரை மண்டபம் என்ற பெயருடன் இருபுறத்திலும் மண்டபங்கள் கட்டப்பட்டுவிட்டன. காஞ்சீபுரத்திலும் இவ்விதமே ஏகாம்பரேசுவரர் கோயிலிலும் காமாக்ஷியம்பாள் கோயிலிலும் நிலாத்தொண்டர், கள்வர் என்று ஆழ்வார் பாடிய இரண்டு திவ்யதேசங்களிருக்கின்றன. ஏகாம்பரேசுவரருடைய கல்யாணோத்ஸவத்திற்கு ஆயிரக்கால் மண்டபத்தில் வரதராஜசுவாமி தாரை வார்த்துக்கொடுக்க அக்காலத்தில் எழுந்தருளியதாகப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் ஆயிரக்கால் மண்டபம் ஒரு பாதி சிவசின்னங்களுடனும், ஒரு பாதி விஷ்ணுசின்னங்களுடனும் காணப்படுகிறது. வரதராஜர் கோயிலுக்குள்ளும் புண்யகோடீசுவரம் என்னும் ஒரு பெரிய சிவாலயம் அமைந்திருந்ததாகச்சொல்லப்படுகிறது. ஆரூரிலும் ஐய்யாற்றிலும் ஆலயங்களில் விஷ்ணு சன்னிதானங்களிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்போதும் திருக்

கோஷ்டியூர், திருவனந்தபுரம், திருப்பாண்டிக்கொடுமுடி, தில்லைச்சிற்றம்பலம், திருக்குறுங்குடி, பிக்ஷாண்டார்கோயில் முதலிய ஆலயங்களில் சிவமூர்த்தியும் விஷ்ணுமூர்த்தியும் சேர்ந்து காக்ஷி கொடுப்பதைக் காண்கிறோம். திருமய்யம் என்னும் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தைச்சேர்ந்த வைஷ்ணவ க்ஷேத்திரத்தில் ஒரே மலையில் அடுத்தடுத்துக் குடையப்பட்ட சத்யமூர்த்திப்பெருமாள்கோயில், சத்யகிரீசுவரர்கோயில் இவ்விரண்டும் ஒரே க்ஷேத்திரமாக சுமார் 700, 800 வருஷங்களுக்கு முன் வரையிருந்ததாகத் தெரிகிறது. அங்குள்ள ஒரு கல்வெட்டின்படி பேதவாத சைவ வைஷ்ணவ சித்தாந்தங்கள் ஏற்பட்ட காலத்தில் இரு கோயில்களையும் வேறுபடுத்த ப்ரயத்னம் நடந்து வெகுகாலம் வரையில் ஸ்ரீரங்கத்திலிருந்து வைஷ்ணவாசாரியர்களையும், திருக்கொடுங்குன்றம் என்னும் பிரான்மலையிலிருந்து சைவாசார்யர்களையும் வரவழைத்து விவாதம் செய்யப்பட்டுக் கடைசியாக எல்லைப்பிரிவினை செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இவ்விதமான க்ஷேத்திரப் பிரிவினைகளுக்கும், அதற்கு மூலமான மனப்பிரிவினைக்கும் ஒரே மருந்து எதுவென்றால், ஆழ்வார்களுடைய சமரஸப்பெருந்தன்மையை அறிந்துகொள்வதேயாகும். பேதவாத சித்தாந்தங்களுக்கு முற்காலமான பண்டைக்காலத்தைப்போல் பேதங்களைக் கடந்துநின்ற ஆழ்வார்களுடைய மனப்பான்மையை அனுசரித்து உத்ஸவங்களும் வழிபாடுகளும் வளரவேண்டும். அவ்வளர்ச்சியாலேயே நம் நாடு பொன்னுடாய்ப்பிரிவினையற்று கருணைவள்ளலாம்எம்பெருமான் திருவடித்தாமரைகளைத்தாங்கும் பெரும்பேறு பெற்றதாகும்.

"அரனை மறவேல்"

"திருமாலுக் கடிமைசெய்" — ஔவையார்.

முற்றிற்று.

16-ம் பக்கத்தில் வாஸிஷ்டலைங்கமும், மாதவீயஸ்ம்ருதிரத்னப்பகுதியும் சிவதத்வ ரகசியத்தில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

S. M. B. P., K. M. U., P. I. C. T. E. 4., 4-3-46 C. 1000.

நம்மாழ்வார்



பப்ளிஷர்ஸ்:—
V. S. வெங்கடராமன் & கம்பெனி,
ஸ்ரீ வேதவிநாயகர் தெரு,
கும்பகோணம்.

wrapper printed at the Cauveri Colour Press Kmu P.I C. No. TE. 43
for V. S. Venkataraman & Co., Kmu. P. I. C. Q. H. No.
M. S. 63—27-5-46 1000 Copies.

290